சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

மனு எண். எம்.சி.ஓ.பி.165/2017

RW-1

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 22 ம் நாள் வெள்ளிக்கிழமை (1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திரு.எம்.மணிகண்டன், எம்.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | காயத்ரி |
| க.பெ. (அ) த.பெ. | கேசவன் |
| வயது | 37 |
| முகவரி | கோயமுத்தூர் |

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் 2 ம் எதிர்மனுதாரரி நிறுவனத்தில் சட்ட உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது தரப்பு சாட்சியத்தை நான் சத்தியப்பிரமாணமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனது பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

1 ம் எதிர்மனுதாரர் விபத்துக்குள்ளான வாகனத்தின் உரிமையாளர் என்றால் சரிதான். இந்த வழக்கில் இறந்து போன நபர் ஓட்டி சென்ற காரின் பதிவு எண் TN 37 BC 2488 என்று சொன்னால் சரிதான். அவரது பெயரில் தான் பதிவு சான்று உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்கண்ட வாகனமானது எங்கள்

நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எங்கள் நிறுவனம் 1ம் எதிர்மனுதாரருக்கு கொடுத்த பாலிசியானது பேக்கேஜ் பாலிசி என்றால் சரிதான். அந்த பாலிசியின் படி மனுதாரர்கள் 3ம் தரப்பினர்கள் என்று சொன்னால் அது சரியல்ல. சம்பவம் சமயத்தில் வாகனததை ஓட்டி சென்ற ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது என்று சொன்னால் சரிதான். வாகனத்தின் உரிமையாளரின் அனுமதியின் படி தான் வாகனத்தின் ஓட்டுநர் ஓட்டினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இறந்த நபருக்கு எங்களது நிறுவனத்தின் காப்பீடு அடிப்படையில் எங்கள் நிறுவனம் காப்பிடு கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் அது சரியல்ல, காரணம் இறந்து போன நபர் Paid and Driver கிடையாது மேலும் இறந்த நபர் மீது தான் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு பின்னிட்டு அவர் இறந்துவிட்ட நிலையில் Referred Chargesheet தாக்கல் செய்யப்பட்டுள்ளது, மேலும் இறந்து போன நபர் 1ம் எதிர்மனுதாரரின் மகன், அதனால் அவர் காப்பீட்டாளரின் காப்பீட்டின் அடிப்படையில் வந்துவிடுவதால் அவருக்கு எங்களது நிறுவனம் காப்பீட்டின் அடிப்படையில் இழப்பீடு தரதேவையில்லை. விபத்திற்கு காரணம் காரின் முன்பக்க டயர் வெடித்தன் காரணமாக விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது, ஆனால் விபத்தானது வாகனத்தின் இயந்திர கோளாறால் நடக்கவில்லை. மனுதாரர்கள் காப்பீட்டை பொருத்து 3ம் தரப்பினர்கள் என்றும் அதனால் எங்களது நிறுவனம் காப்பீடு கொடுக்க கடமைப்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி